# எங்களை அழையுங்கள்.

# உதவிசெய்வதற்கு நாங்கள் இருக்கின்றோம்.

பாரபட்சத்தினால் நீங்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன் பின்வருவன தேவைப்பட்டால்:

- உங்களுக்கு நடந்த இந்தப் பாரபட்சத்தை எதிர்கொள்ள சட்டரீதியான ஆலோசனை
- ஒன்டாரியோ மனித உரிமைகள் இணைக்கமன்றுக்கு (Human Rights Tribunal of Ontario) விண்ணப்பிக்க்க சட்டரீதியான உதவி

எங்களை அழையுங்கள்:

தொலைபேசி: (416) 597-4900

கட்டணமற்றது: 1-866-625-5179

TTY: (416) 597-4903

கட்டணமற்ற TTY : 1-866 612-8627

எங்களுடைய தொலைபேசிச் சேவை நேரங்கள்:

திங்கள், செவ்வாய், புதன் & வெள்ளி: காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை

வியாழன்: மாலை 2 மணி முதல் 6 மணி வரை

**www.hrlsc.on.ca**

நியாயமற்றவிதத்தில் நடத்தப்படல் யாவும் பாரபட்சம் ஆக மாட்டாது. இந்தச் *சட்டவிதியின்*, கீழ் அடங்குவதற்கு, அந்த நடத்தப்படுகை, தனிப்பட்ட பண்பு ஒன்றுடனும்.(உ. இனம், பாலினம்) அந்தச் *சட்டவிதியில்* (உ. வேலைவாய்ப்பு, குடியிருப்பு) குறிப்பிடப்பட்டிருக்கும் பகுதி ஒன்றுடனும் தொடர்புடையதாக இருக்க வேண்டும்.

பாலினம்

வேலைவாய்ப்பு

இனம்

குடியிருப்பு

பாலின ஆர்வம்

இயலாமை




# நீங்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டிருக்கின்றீர்களா? சட்ட உதவி தேவையா?

ஒன்டாரியோ *மனித உரிமைகள் சட்டவிதியின்* கீழுள்ள மனித உரிமைகளை இழந்திருக்கும் ஒன்டாரியோ மக்களுக்கு **மனித உரிமைகள் சட்ட உதவி மையம்** (Human Rights Legal Support Centre) (“**மையம்**”) இலவசமான சட்ட ஆதரவை வழங்குகின்றது.

# ஒன்டாறியோவில் மனித உரிமைகள்

ஒன்டாறியோவின் மனித உரிமைகள் அமைப்பு, மூன்று வேறுபட்ட ஏஜன்சிகளால் உருவாக்கப்பட்டுள்ளது.

- ஒன்டாறியோ *மனித உரிமைகள் சட்டவிதியின் கீழ்* பாரபட்சத்துக்குட்பட்ட மக்களுக்கு, **மனித உரிமைகள் சட்ட உதவி மையம்** சட்ட உதவியை வழங்குகின்றது.. www.hrlsc.on.ca
- ஒன்டாறியோ மனித உரிமைகள் இணக்கமன்றில் விண்ணப்பங்கள் பூர்த்திசெய்யப்படுவதுடன் தீர்மானம் எடுக்கப்படுகின்றது. www.hrto.on.ca
- ஆய்வு, கல்வியறிவூட்டல் மற்றும் கொள்கை உருவாக்கம் மூலம் மனித உரிமைகளை ஒன்டாறியோ மனித உரிமைகள் ஆணைக்குழு மேம்படுத்துகின்றது. www.ohrc.on.ca

ஒன்டாறியோ மனித உரிமைகள் சட்டவிதி, பின்வருவன உள்ளடங்கலாக குறிப்பிட்ட பிரிவுகளில் பாரபட்சமாகவும் எதிர்மறையாகவும் நடத்தப்படுவதிலிருந்து உங்களைப் பாதுகாக்கலாம்:

- வேலை;
- குடியிருப்பு
- திட்டங்கள் அல்லது அரச சேவைகள் (உ+ம். பாடசாலைகள், போக்குவரத்து அல்லது காவல்துறை)
- கடைகள், உணவகங்கள் போன்றவை.

பின்வருவன தொடர்பான பாரபட்சம் மற்றும் தொந்தரவைத் தடுத்தலே இந்தச் சட்டவிதியின் நோக்கமாகும்:

- **உங்களுடைய இனம், நிறம், வம்சாவளி, பிறப்பிடம், குடியுரிமை, தேசியம்**
- **கோட்பாடு** (மதம்)
- **அரச உதவி பெறல்** (குடியிருப்புச் சூழல்களுக்கு மட்டும் பொருந்தும்)
- **திருமண நிலை மற்றும் குடும்ப அந்தஸ்து**
- **குற்றப் பதிவுகள்** (வேலைவாய்ப்புக்கு மட்டுமே பொருந்தும் அத்துடன் குறித்த நபருக்கு மன்னிப்புக் கிடைத்திருக்க வேண்டும்)
- **வயது**
- **வலுவிழப்பு** (புலப்படக்கூடியது அல்லது புலப்படாதது)
- **பாலியல் அல்லது பால்** (பாலியல் ஆர்வம், கர்ப்பம், பாலியல் தொந்தரவு, பாலின அடையாளம் / வெளிப்பாடு).

பின்வருவன உள்ளடங்கலான **இலவச சட்ட மற்றும் ஆதரவுச் சேவைகளை** மனித உரிமைகள் சட்ட உதவி மையம் வழங்குகின்றது:

- உங்களுடைய பிரச்சினை *மனித உரிமைகள் சட்டவிதியின் கீழ்* அடங்குமா என்பது பற்றிய **ஆலோசனை**
- உங்களுக்குத் தீர்வொன்றைப் பெற்றுத் தருவதில் **உதவி**
- உங்களுடைய கோரிக்கைக்கு விரைவில் நாங்கள் தீர்வு காணலாம்
- இணக்கமன்றுக்கான உங்களுடைய மனித உரிமைகள் விண்ணப்பத்தில் **உதவிசெய்தல்**
- தீர்வுகளுக்கான பேச்சுவார்த்தைகளில் உங்களைப் **பிரதிநிதித்துவப்படுத்தல்**
- உங்களுடைய இணக்கமன்று மத்தியஸ்தம் மற்றும் விசாரணையில் உங்களைப் **பிரதிநிதித்துவப்படுத்தல்**
- இணக்கமன்றுக் கட்டளையை அமுல்படுத்தல்

## மனித உரிமைகள் கோரிக்கை ஒன்று உங்களுக்கு இருப்பதாக நீங்கள் நினைத்தால்

எங்களுடைய சேவைகள் பற்றி அறிவதற்கு எங்களிடம் www.hrlsc.on.caல் வாருங்கள். எங்களை அழையுங்கள். உங்களுக்கு என்ன நடந்தது (யார், எப்போது, என்ன மற்றும் எங்கே), அந்த நிகழ்வுகள் உங்களை எப்படிப் பாதித்தன மற்றும் எவ்வகையான இழப்பீடு, அல்லது பரிகாரத்தை நீங்கள் விரும்புகின்றீர்கள் என்று நீங்கள் எங்களுக்குச் சொல்ல வேண்டும். உங்களுடைய கோரிக்கைகளுக்கு ஆதரவளிக்கும் ஆவணங்களைச் சேகரியுங்கள். உங்களுக்கு என்ன நடந்தது என்பதைப் பார்த்த சாட்சிகள் எவராவது உள்ளனரா?

மனித உரிமைகள் விண்ணப்பமொன்றைத் தாக்கல்செய்வது பற்றிய தகவல்களுக்கு எங்களுடைய இணக்கமன்றின் வலைத் தளத்தை www.hrto.caல் பார்வையிடுங்கள்.

பாரபட்சம் பற்றி மேலும் அறிந்துகொள்ளா ஆணைக்குழுவின் வலைத் தளத்தை www.ohrc.on.caல் பார்வையிடுங்கள்.

## உங்களுடைய மொழியில் சட்ட சேவை

எங்களால் 140 மொழிகளில் சேவைகளை வழங்க முடியும். எங்களை அழையுங்கள். உங்களுக்கு விருப்பமான மொழியில் உங்களுடன் பேசுவதற்கு நாங்கள் ஏற்பாடு செய்வோம்.

### எதிர்கால பாரபட்சத்தைத் தடைசெய்தல்

நீங்கள் பாரபட்சமாக நடத்தப்பட்டிருந்தால், நீங்கள் அனுபவித்த துன்பங்களுக்கான பண இழப்பீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு மையம் உங்களுக்கு உதவிசெய்யலாம்.

தீர்வுகளுக்கான பேச்சுவார்த்தைகளில் அல்லது இணக்கமன்று விசாரணையில் மனித உரிமைகள் ஆதரவு நிலையம் உங்களுக்குச் சட்டரீதியாக உதவியை வழங்கும்போது, ஏனையோருக்கும் உதவக்கூடிய விளைவுகளை நீங்கள் பெற்றுக்கொள்வதற்கும் நாங்கள் உதவிசெய்வோம். உதாரணம், உங்களுடைய வேலைவழங்குநர், நிலப்பிரபு அல்லது சேவைவழங்குநர் பின்வருவனவற்றைச் செய்ய வேண்டியிருக்கலாம்:

- பாரபட்சமான நடைமுறைகளை இல்லாமல் செய்தல்
- பாரபட்சமற்றா நடைமுறைகளை அமுல்படுத்தல்
- மனித உரிமைகள் பற்றிய விடயங்களில் அனைத்துப் பணியாளார்களுக்கும் பயிற்சியளித்தல்.

**www.hrlsc.on.ca**